# <u>தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு</u>

மேற்படி ஆணைக்குழுவில் பின்வரும் பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர்

**தகைமை : வெளிப்புற விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. சமூக விஞ்ஞானம் இதழியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலைப் பட்டம்

உடன்

சம்பந்தப்பட்ட துறையில் ஆய்வு தொடர்பான முதுமானிப்பட்டம் (Masters) பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

பட்டப்படிப்புக்குப் பிறகு அரசு, அரச கூட்டுத்தாபனம், அமைப்பு, சட்டத்தினால் உருவாக்கப்பட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் ஆய்வு அனுபவம்.

02. சமூக விஞ்ஞானம், இதழியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு இளங்கலைப் பட்டத்துடன் தொடர்புடைய துறையில் கலாநிதிப்பட்டம் (PhD).

மற்றும்

பட்டப்படிப்புக்குப் பிறகு அரசு, அரச கூட்டுத்தாபனம், அமைப்பு, சட்டத்தால் உருவாக்கப்பட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் ஆய்வு அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்:- (தற்போது இந்த ஆணைக்குழுவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டும்) (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

01. மேற்குறிப்பிட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்குரிய தகைமைகளை புர்த்தி செய்திருத்தல்

02. சமூக விஞ்ஞானம், இதழியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு அல்லது பொது இளங்கலைப் பட்டம்

உடன்

சமூக விஞ்ஞானம் இதழியல் அல்லது சட்டம் சம்பந்தப்பட்ட துறையில் முதுமானிப்பட்டம் (Masters) பெற்றிருக்க வேண்டும்

மற்றும்

"கல்வி/ஆராய்ச்சி" சேவைகள் (AR 1) பிரிவில் உள்ள ஒரு பதவியில் குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்திருக்க வேண்டும்.

03. சமூக விஞ்ஞானம், இதழியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு அல்லது பொது இளங்கலைப் பட்டம்

உடன்

சமூக விஞ்ஞானம், இதழியல் அல்லது சட்டம் தொடர்புடைய துறையில் கலாநிதிப்பட்டம் (PhD).

மற்றும்

"கல்வி/ஆராய்ச்சி" சேவைகள் (AR 1) பிரிவில் உள்ள ஒரு பதவியில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்திருக்க வேண்டும்.

**வயது:** 30 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**ஊதிய அளவு:** AR 2 - &. (76,200 - 10 x 2.000 – 96,200)

**ஆட்சேர்ப்பு முறை**

**கட்டமைக்கப்பட்ட நேர்காணல்:**

01. கல்வித் தகுதி (அடிப்படைத் தகுதியுடன் கூடுதலாக) 30 மதிப்பெண்கள்

02. ஆய்வு அனுபவம் 10 மதிப்பெண்கள்

03. வெளியீடுகள் மற்றும் காப்புரிமைகள் (ியவநவெ) 20 மதிப்பெண்கள்

04. வெளிப்புற பாட விதான செயற்பாடுகள் 10 மதிப்பெண்கள்

05. ஆளுமை 15 புள்ளிகள்

06. சம்பந்தப்பட்ட துறைகளின் பொது அறிவு 15 புள்ளிகள்

மொத்தம் 100 மதிப்பெண்கள்

## 02. சட்ட உதவியாளர் தகுதிகள்:

**தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம் பெற்று,

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**ஊதிய அளவு** - MA 3: Rs: 32,200 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 – 54,960

**ஆட்சேர்ப்பு முறை:**

**கட்டமைக்கப்பட்ட நேர்காணல்**

01. தொடர்புடைய அனுபவம் 30 மதிப்பெண்கள்

02. தொடர்புடைய மேலதிக கல்வி, தொழில்முறைத் தகுதி 30 மதிப்பெண்கள்

03. வேறு திறமைகள் மற்றும் சாதனைகள் 15 மதிப்பெண்கள்

04. நேர்முகத் தேர்வில் காட்டப்படும் தகுதி 25 மதிப்பெண்கள

- மொத்தம் 100 மதிப்பெண்கள்

## 03.அபிவிருத்தி உத்தியோகத்தர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலைப் பட்டமொன்று பெற்றிருத்தல்

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**ஊதிய அளவு** - MA 3: Rs: 32,200 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 – 54,960

**ஆட்சேர்ப்பு முறை:**

**கட்டமைக்கப்பட்ட நேர்காணல்**

01. தொடர்புடைய அனுபவம் 30 மதிப்பெண்கள்

02. தொடர்புடைய மேலதிக கல்வி, தொழில்முறைத் தகுதி 30 மதிப்பெண்கள்

03. வேறு திறமைகள் மற்றும் சாதனைகள் 15 மதிப்பெண்கள்

04. நேர்முகத் தேர்வில் காட்டப்படும் தகுதி 25 மதிப்பெண்கள

- மொத்தம் 100 மதிப்பெண்கள்

## 04. மொழிபெயர்ப்பாளர் தமிழ்

**தகைமைகள்: வெளி விண்ணப்பதாரர்கள்**

தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி அல்லது அதற்கு இணையான பாடத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டப்படிப்புக்கு தமிழை பாடமொன்றாக தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் க.பொ.த (சாதாரன தரம்) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.

பட்டப்படிப்புக்கு ஆங்கிலத்தை பாடமொன்றாக தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் க.பொ.த (சாதாரன தர்) பரீட்சையில் தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.

**வயது:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**ஊதிய அளவு** - MA 3: Rs: 32,200 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750 – 54,960

**ஆட்சேர்ப்பு செயல்முறை:**

**கட்டமைக்கப்பட்ட நேர்காணல்**

01. தொடர்புடைய மேலதிக அனுபவம் 30 மதிப்பெண்கள்
02. தொடர்புடைய மேலதிக கல்வி, தொழில்முறைத் தகுதி 30 மதிப்பெண்கள்
03. வேறு திறமைகள் மற்றும் சாதனைகள் 15 மதிப்பெண்கள்
04. நேர்முகத் தேர்வில் காட்டப்படும் தகுதி 25 மதிப்பெண்கள் மொத்தம் 100 மதிப்பெண்கள்

## 05. முகாமைத்துவ உதவியாளர்

**தகைமை: வெளி விண்ணப்பதாரர்கள்**

01. க.பொ.த (சாதாரன தரம்) பரீட்சையில,

1. மொழி,
2. கணிதம்,
3. ஆங்கில மொழ

உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

02. க.பொ.த உயர்தரப்பரிட்சையில் ஆகக்குறைந்தது 03 பாடங்களில் (பொது சாதாரண பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்

03.பதவிக்கு தேவையான பிற தகுதிகள்:- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட 06 மாதங்களுக்கு குறையாத கணினி அறிவு தொடர்பான சான்றிதழ்.

**உள்ளக் விண்ணப்பதாரர்கள்:- (தற்போது இந்த ஆணைக்குழுவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டும்)**

01. முதன்மை தரம் - (Non- technical , semi – technical and technical categories) ("ஆ'' "இ" மற்றும் "ஈ" ஆகிய தகைமை உள்ளோர் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) 01. க.பொ.த (சாதாரன தரம்) பரீட்சையில,

1. மொழி,
2. கணிதம்,
3. ஆங்கில மொழ

உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அந்த நியமனங்களில் நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

(ஈ) நிரந்தர நியமனம் ஒன்றின் கீழுள்ளவர்கள் உரிய தேதிக்கு முன்னதாக 05 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

**வயது:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**ஊதிய அளவு** - MA 1-2 Rs. (27,910 - 10 x 300 - 7 x 350 - 12 x 600 - 12 x 710 – 49,080)

**ஆட்சேர்ப்பு முறை:**

**கட்டமைக்கப்பட்ட நேர்காணல்**

01. தொடர்புடைய அனுபவம் 30 மதிப்பெண்கள்

02. தொடர்புடைய மேலதிக கல்வித் தகுதி 30 மதிப்பெண்கள்

03.வேறு திறமைகள மறறும் ் செயல்திறன் 15 மதிப்பெண்கள

04. நேர்முகத் தேர்வில் காட்டப்படும் தகுதியின் 25 மதிப்பெண்கள்

மொத்தம் 100 மதிப்பெண்கள்

**பொதுவான நிபந்தனைகள்**

1. ஆரச நிறுவனங்களில் அல்லது சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழு மற்றும் சபைகளில் பணிபுரிபவர்கள் தங்கள் விண்ணப்பத்தை நிறுவனத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 1956 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையின் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்படுவார்கள்.

3. நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து, 12% ஊழியர சேமலாப நிதியத்துக்கும், 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கும் கமிஷனால் செலுத்தப்படும்.

4. நியமனம் பெற்றவர்களுக்கு அக்ரஹார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவக் காப்பீடு உண்டு..

5. அனைத்து பதவிகளுக்கும் அரசு அனுமதித்த கொடுப்பனவுகளுக்கு உரிமை உண்டு.

விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப் படிவத்தை தங்களால் தயாரிக்கப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பப் படிவத்தை பின்வரும் முகவரிக்கு 2024………… க்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பித்த பதவியை அட்டையின் இடது மூலையில் குறிப்பிட வேண்டும்.

புணிப்பாளர் நாயகம்

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு

அறை எண். 203-204

கட்டிட எண்.02

பண்டாரநாயக்க சர்வதேச நினைவு மாநாட்டு மண்டபம் கொழும்பு 07.